மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 77/2020

பெயர் : சாந்தாமணி
சாட்சி – வா.சா–1 நாள்: 26.11.2025

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியும். சாமளாபுரம் கிராமம் க.ச.451/1எ காலையில் எனக்கு சொத்து உள்ளது. க.ச.451 காலையில் 1எ மற்றும் 1சி ஆகிய உட்பிரிவுகளில் எனக்கு சொத்து உள்ளது. க.ச.451/1சி காலையில் சாளை உள்ளது. அதன் வழியே தான் எனது தோட்டத்திற்கு செல்ல முடியும். பிரதிவாதிகளுக்கு க.ச.451 காலையில் 1பி மற்றும் 4 ஆகிய உட்பிரிவுகளில் சொத்து உள்ளது என்றால் சரிதான். க.ச.451/1டி காலையில் எனது சொத்தை ஒட்டி பிரதிவாதிகளுக்கு சொத்து உள்ளது என்றால் சொத்து உள்ளது ஆனால் அதன் உட்பிரிவு எனக்கு தெரியாது.

2. க.ச.451/1இ காலையில் கிணற்று வாரி மற்றும் வண்டித்தடம் ஆகியவை உட்பிரிவு ஆகி உள்ளது என்றால் சரிதான். க.ச.451/3பி காலையில் கிணறு உட்பிரிவு ஆகி உள்ளது என்றால் கிணறு உள்ளது அதன் உட்பிரிவு எனக்கு தெரியாது. க.ச.451/3பி காலை கிணற்றில் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் மற்றும் மற்ற பாகஸ்தர்களுக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். கிணற்றுவாரி மற்றும் வண்டித்தடம் ஆகியவை பிரதிவாதிகள் பூமிக்கு கிழபுறமாக உள்ளது என்றும் 1இ காலையாக உட்பிரிவு ஆகி உள்ளது என்றும் சொன்னால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் புல வரைபடங்கள் க.ச.451/1எ, 1பி, 1சி, 1டி, 1இ மற்றும் க.ச.451/3பி காலைகளுக்கு உண்டானது என்றால் சரிதான். (**சாமளாபுரம் கிராமம் க.ச.451/1எ, 1பி, 1சி, 1டி, 1இ மற்றும் க.ச.451/3பி காலைகளுக்கு உண்டான புல வரைபடங்கள் முறையே பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**). மேற்படி உட்பிரிவுகள் எந்த வருடம் ஆனது என்று எனக்கு

தெரியாது. மேற்படி உட்பிரிவுகள் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1980 களில் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எத்தனை வருடங்களாக தடம் சம்மந்தமான பிரச்சனை உள்ளது என்றால் சுமார் 1 வருடங்களுக்கு முன்பிலிருந்து பிரச்சனை இருந்து வந்தது. முன்பு பிரச்சனை இல்லாமல் தான் இருந்தது. குழாய் பதித்த பின்பு தான் பிரச்சனை செய்கிறார்கள். நான் சொல்வது தவறு என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கு 5, 6 வருடங்களுக்கு முன்பிலிருந்தே பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல.

5. க.ச.451/1 எ காலையில் உள்ள தென்னை மரங்கள் எப்போது வைக்கப்பட்டது என்றால் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு எனது அப்பா காலத்தில் வைக்கப்பட்டது. காளியம்மாள் எனது அம்மா ஆவார். அவர் சொத்தினை வாங்கும் போது சொத்தில் தென்னை மரங்கள் இல்லை என்றால் சரிதான். தாவாவிற்கான சொத்து விவரம் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் எனது அம்மா எனக்கு தடம் எழுதிக் கொடுத்தார் அதன் அடிப்படையிலும் எனது பத்திரத்தின் அடிப்படையிலும் கொடுத்தேன்.

6. எனது அம்மா கிரையம் பெற்ற பத்திரத்தில் தட உரிமை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் எனது அம்மாகிரையம் பெற்ற பத்திரத்தில் எந்த தட உரிமையும் அவருக்கு அளிக்கபடவில்லை என்றும், எனவே அவர் எனக்கு தடம் எழுதி வைக்க எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனது பெயருக்கு எனது அம்மா தட உரிமை அளித்த பத்திரத்தில் பிரதிவாதிகள் யாரும் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான்.

7. தென்னந் தோப்பை ஒட்டி வடபுறம் வாத்தியார் தோட்டம் என்று உள்ளது. மேற்படி தோட்டத்திற்கும் எங்கள் பூமிக்கும் இடையே இட்டேரி செல்கிறது என்றால் சரியல்ல. சாளை மட்டும் தான் உள்ளது. க.ச.451 காலையில் மொத்தம் எத்தனை பிரிவாக கிரையம் பெற்றார் என்றால் ஒரே கிரையமாக தான் பெற்றார். தடத்தின் அகலம் எவ்வளவு என்று ஆவணத்தில் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. க.ச.451 காலையில் மொத்தம் 1.79 ஏக்கருக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் எனது

அக்காவின் 50 செண்டும் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 பத்திரமானது க.ச.451 காலையைப் பொறுத்து மட்டும் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. வேறு காலையைப் பொறுத்தும் எழுதப்பட்டுள்ளது.

8. க.ச.451 காலையில் எங்களுக்கு எந்த காலத்திலும் தடம் இருந்ததில்லை என்றால் சரியல்ல. க.ச.451 காலையில் எங்களுக்கு தடம் ஏதேனும் இருந்திருந்தாலோ, நாங்கள் அனுபவித்திருந்தாலோ வருவாய் ஆவணங்களில் க.ச.451/1பி காலையைப் பொறுத்து எங்களது பெயரையும் சேர்த்திருப்பார்கள் என்றும், உரிமை இல்லாததால் தான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. க.ச.451/1பி காலையில் தடம் இருந்திருந்தால் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்யப்பட்டபோதே அதனை தனியாக உட்பிரிவு செய்திருப்பாகள் என்றால் சரியல்ல.

9. சாளைக்காக வாங்கப்பட்டதாக சொல்லும் 6 செண்ட் செக்குப்பந்தியில் தடம் இருப்பதாக எந்த குறிப்பும் இல்லை என்றும், அவ்வாறு எந்த தடமும் இல்லாததால் தான் செக்குப்பந்தியில் அதனை குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. க.ச.451/1பி காலையில் நாங்கள் அனுபவித்து வருவதை காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் காலம் காலமாக அனுபவித்து வருகிறோம். நான் காலம்காலமாக அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 5, 6 வருடங்களாக இருந்த பிரச்சனையின் காரணமாக இல்லாத தடத்தை இருப்பதாக நானும் எனது அம்மாவும் தடத்தை குறித்து வழக்கு தாக்கல் செய்வதற்காக ஆவணம் ஏற்படுத்தி கொண்டுள்ளோம் என்றும், அந்த ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. க.ச.451/1பி காலை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும் அதில் எங்களுக்கு தடம் உள்ளிட்ட எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

11. பொதுக்கிணற்றில் இருந்து திறந்த வெளி வாய்க்கால் எங்கள் பூமி வரை செல்கிறது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1 வருடத்திற்கு மூன்பும் திறந்த வெளி வாய்க்கால் இருந்தது என்றால் சரிதான். பொது கிணற்றில்

இருந்து திறந்த வெளி வாய்க்கால் மூலமாக தண்ணீர் எடுத்து செல்லும் உரிமை மட்டுமே எங்களுக்கு உள்ளது என்றும், அடி நிலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. வாய்க்கால் வழியே தான் சென்று நாங்கள் தேங்காய், எடுத்து வந்து கொண்டிருந்தோம் என்றும், நாங்கள் சொல்வது போல் எந்த தடமும் கிடையாது என்றால் சரியல்ல.

12. பிரதிவாதிகள் ஊரில் இல்லாத சமயத்தில் வாய்க்காலின் அடியில் குழாய் அமைத்து தடத்தை உருவாக்க முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. எங்களது சட்ட விரோத முயற்சியை பிரதிவாதிகள் தடுத்ததால் பிரதிவாதிகள் பொய்யான ஆவணத்தை உருவாக்கு அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் ஆவணத்திலோ, வழக்கு சொத்து விவரத்திலோ, நாங்கள் அனுபவித்து வருவாதாக சொல்லும் தடத்தின் அகலம் எவ்வளவு என்று எந்த குறிப்பும் இல்லாததிலிருந்தே அங்கு எந்த தடமும் இல்லை என்பது தெளிவாகிறது என்றால் சரியல்ல.

13. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கை மற்றம் வரைபடத்தில் தடத்தின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு என்று எதையும் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தடத்தை பற்றி தனது அறிக்கையிலோ, வரைபடத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தடம் போன்ற அமைப்பு இருப்பதாக பொய்யாக ஒரு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் ஆவணங்கள் மற்றும் சொத்தின் பௌதீக அமைப்பிற்கு முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

14. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நாங்கள் பிரதிவாதிகளிடம் ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு தடம் உள்ளதாக பிரச்சனை செய்தோமா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தடம் இல்லை என்று சொல்லி பிரதிவாதிகள் எங்களை தடுத்தார்களா என்றால் தடுத்தார்கள். அப்போது தடம் சம்மந்தமான பத்திரம் உள்ளதை பிரதிவாதிகளிடம் தெரிவித்தோமா என்றால் தெரிவித்தோம். மேற்படி ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று அவர்கள் மறுத்தார்கள் என்றால் சரிதான்.

15. எங்களுக்கு இல்லாத உரிமையை இருப்பதாக பிரதிவாதிகள் எங்களிடம் தெரிவித்ததால் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிணற்றில் இருந்து தற்போதும் தண்ணீர் எடுத்து சென்று வருகிறோம் என்றால் சரிதான். தண்ணீர் எடுத்து செல்ல பிரதிவாதிகள் எங்களை தடுக்கவில்லை. எங்கள் பூமிக்கும், பிரதிவாதிகள் பூமிக்கும் சுமார் 3/4 அடி உயரம் வித்தியாசம் இருக்கும்.

16. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலமே இல்லை என்றும் பொய்யான சங்கதிகளை வழக்கு தாக்கல் செய்வதற்காக உருவாக்கி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பொது கிணற்றை சொத்து விவரத்தில் காண்பித்துள்ளதால் மற்ற பாகஸ்தர்களை சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.26 18:39:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.